### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு: ரூ.8 கோடியில்

# போலாம்பட்டி காப்புக்காடு பகுதியில் யானைகள் முகாம்!

## அரசாணை வெளியீடு!

சென்னை, ஜூன் 20-

கோயம்புத்தூர், போலாம்பட்டி காப்புக் காடு பகுதியில் உள்ள சாடிவயலில் புதிய யானைகள் முகாம் அமைக்க ரூ.8 கோடி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு நேற்று (19.06.2023) அரசாணை வெளியிட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு முதல் தற்காலிக யானைகள் முகாமாக ஏற்கனவே செயல்பட்டு வரும் சாடிவயலில், புதிய யானைகள் முகாம் அமைப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2023 மார்ச் 15 ஆம் தேதி வெளியிட்ட அறிவிப்பின் படி இந்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. யானை கொட்டகைகள், கால் நடை மருத்துவ வசதிகள், சமையலறை மற்றும் யானை புகா அகழிகள், யானைகளுக்கான உணவு மற்றும் தண்ணீர் வசதிகள் ஆகியவற்றை உருவாக்க இந்தத் தொகை பயன்படுத்தப்படும். இந்த முயற்சிகள் மூலம், யானைகளுக்கான பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்தும் தமிழ்நாடு அரசின் கொள்கையின்படி, முகாம் யானைகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படும். தேவையான வசதிகளுடன் கூடிய சிறப்பு போக்குவரத்து உட்பட மீட்பு பணியினை வலுப்படுத்துதல் இதன் நோக்கமாகும்.

பொள்ளாச்சி ஆனை மலை புலிகள் காப்பகத்தில் உள்ள கோழிகமுத்தி யானைகள் முகாமை மேம்படுத்தவும் அரசு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட்டுள்ளது. இத்தொகை, முகாமில், உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், யானை பராமரிப்பாளர்கள், மற்றும் காவடிகளுக்கான பயிற்சி, பார்வையாளர்களுக்கான காட்சிக் கூடம் அமைத்தல், உணவு தயாரிக்கும் பகுதியை மேம்படுத்துதல் மற்றும் யானைகளுக்கான குடிநீர் வசதி ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படும்.

இதுதவிர, 15.03.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின்படி, தெப்பக்காடு மற்றும் கோழிகமுத்தி யானைகள் முகாமில் உள்ள 91 யானை பராமரிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு சூழலுக்கியைந்த சமூக இணக்கமான வீடுகள் கட்டுவதற்கு ரூ.9.10 கோடியை அரசு அனுமதித்தும் ஆணை வெளியிட்டுள்ளது. முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு யானைகள் காப்பகம் பராமரிப்பாளர்களுக்கு 44 வீடுகளும், பொள்ளாச்சி ஆனை மலை புலிகள் காப்பகத்தில் உள்ள கோழிகமுத்தி யானைகள் காப்பகத்தில் 47 வீடுகளும் கட்டப்படும்.

கடந்த ஆண்டு, புதிய யானைகள் காப்பகமாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் 1,19,748.26 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள அகத்தியர் மலைப் பகுதியை அகத்தியர் மலை யானைகள் காப்பகம் எனும் பெயரில் புதிய யானைகள் காப்பகமாக அரசு அறிவித்தது. இந்த ஆண்டு தாய்லாந்து நாட்டிற்கு 13 யானைப் பராமரிப்பாளர்கள் மற்றும் காவடிகள் குழு ஒன்றை தமிழ்நாடு அரசு முதன்முறையாக சிறப்பு பயிற்சிக்காக அனுப்பியுள்ளது.

### மழைக் காலங்களில்

# பேரிடர்களை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள ஆயத்தப் பணிகள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, ஜூன் 20 -

வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழ்நாட்டில் (18.06.2023) முதல் பரவலாக மழை பெய்து வரும் நிலையில், மழைக்காலங்களில் பேரிடர்களை எதிர் கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள ஆயத்த பணிகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் நேற்று (19.06.2023) மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு செய்தார்.

**மழை விபரம்**

தென்மேற்கு பருவமழைக் காலத்தில், 1 -6 - 2023 முதல் 19-6- 2023 முடிய 25.9 மி.மீ. மழை பெய்துள்ளது. இது இயல்பான மழை அளவைக் காட்டிலும் 22 விழுக்காடு குறைவு ஆகும். கடந்த 24 மணி நேரத்தில்வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக 27 மாவட்டங்களில் மழைப்பொழிவு ஏற்பட்டுள்ள நிலையில் மாநில சராசரி 11.10 மி.மீ. ஆகும்.

20.06.2023 முதல் 22.06.2023 தமிழ்நாட்டில் சில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும், ஒரு சில பகுதிகளில், இடி மற்றும் மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

19.06.2023: மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும். வட தமிழக கடலோரப் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

20.06.2023 முதல் 22.06.2023 : மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

தமிழகத்தில், பரவலாக பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு பகுதிகளில் உள்ள மழை நீரை வெளியேற்றும் பணியை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில், சென்னை மாநகராட்சி உட்பட தொடர்புடைய மாநகராட்சிகளும், மாவட்ட நிருவாகங்களும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றன.

சென்னை மாநகராட்சியில் கடந்த 24 மணி நேரத்தில் (18.06.2023 8.30. முற்பகல் முதல் 19.06.2023 8.30 முற்பகல் வரை) 4213.50 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதன் சராசரி 78.03 மி.மீ. ஆகும். பல பகுதிகளில் இரவு முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதால் மழை நீர் தேங்கிய நிலையில் மழைநீர் அகற்றப்பட்டு விட்டது. சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில், மழைநீர் தேங்கவில்லை. இப்பணியில் 22 அதிக திறன் கொண்ட நீர் உறிஞ்சும் இயந்திரங்கள், மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டது. மாநகராட்சி பகுதிகளில் பலத்த காற்று காரணமாக 6 இடங்களில் மரங்கள் விழுந்த நிலையில் அவை உடனடியாக அகற்றப்பட்டு விட்டன. மாநகராட்சி பகுதிகளில் உள்ள 169 நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கனமழையின் காரணமாக திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை, வேலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 6 மாவட்டங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

பேரிடர் தொடர்பான தகவல்களை துறை அலுவலர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவிக்கும் வகையில், மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையமும், மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்களும் 24 மணி நேரமும் கூடுதலான அலுவலர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தை முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவும், வாட்ஸ் அப் எண். 94458 69848 மூலமாகவும் தொடர்பு கொண்டு புகார்களை பதிவு செய்யலாம்.

முன்னதாக தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் கடந்த 09.06.2023 அன்று அனைத்து துறை அலுவலர்கள், முப்படையினை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஒன்றிய அரசின் நிறுவனங்களின் அலுவலர்களுடன் தென்மேற்கு பருவமழை குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்து, மழைநீரை உடனடியாக அகற்றவும், மழைநீர் வடிகால்கள் மற்றும் நீர்நிலைகளை தூர்வாரவும், பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் போக்குவரத்தை சீர் செய்யுமாறு அறிவுரை வழங்கினார்கள்.

தென்மேற்கு பருவமழை காலத்தில் ஏற்படும் கனமழை மற்றும் அதனைத் தொடர்ந்த வெள்ளம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் அரசு மற்றும் மாவட்ட நிருவாகம் மூலம் வழங்கப்படும் முன்னெச்சரிக்கை செய்திகளை கூர்ந்து கவனித்து செயல்படுமாறும், மாவட்ட நிருவாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

# இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை.ஜூன் 20 -

நெல்லை கிழக்கு மாவட்டத்தில் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் வருகின்ற 25.06.2023 அன்று மாலைக்குள் மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும்.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுடைய அறிவுத்தலின் படி மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி,நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர், அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் நெல்லை கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்களைப் பெற்று, அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் வருகின்ற 25.06.2023 அன்று மாலைக்குள் மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

குறிப்பு : ஒன்றிய, நகர, பேரூர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கல்விச் சான்றிதழ் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை,நகல் இணைக்கப்பட வேண்டும். பாஸ் போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி புதிய கிளையினை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளருமான ஆவடி நாசர் எம்.எல்.ஏ. முன்னிலையில் தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்து வங்கி பணியை துவக்கி வைத்தார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், வங்கியின் உயர் அதிகாரிகள் ரெயாசுல் ஹேக், அமித்குமார் சுக்லா, இந்துமதி, ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி கழகச் செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், பேபி சேகர், ஜி.நாராயண பிரசாத், உள்பட வங்கி ஊழியர்கள் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## வலைதளங்களில் வலம் வருவது!




### தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில்

# அனைத்து தலைமைப் பொறியாளர்களுடன் ஆய்வு!

## அமைச்சர் தங்கம் தென்னரசு மேற்கொண்டார்!

சென்னை, ஜூன் 20-

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நேற்று (19.06.2023) நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அனைத்து தலைமை பொறியாளர்களுடன், ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் ரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மின்தேவை குறித்து நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

ஆய்வின் போது அனல், புனல் மற்றும் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்களின் மூலமாக உற்பத்தி செய்யக் கூடிய மொத்த மின்சாரத்தின் அளவு குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் நடைபெற்று வரும் மின் உற்பத்தி திட்டங்கள் மற்றும் மின் தொடரமைப்பு திட்டங்கள் பற்றியும் ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ் நாட்டு மக்களுக்கு தேவைப்படும் மின்சாரத்தின் மொத்த தேவையினை கருத்தில் கொண்டு, தமிழ் நாடு மின்சார வாரியம் தமிழ்நாட்டு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க அலுவலர்களிடம் நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சட்டமன்றத்தில் ஏரிசக்தித் துறை சார்பாக அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்டார். மின்னகத்தின் சேவையை ஆய்வு செய்து, மின்நுகர்வோர்களின் குறைகளை உடனுக்குடன் சரிசெய்ய அறிவுறுத்தினார்.

எதிர்வரும் பருவமழை குறித்து மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சீரான மின் விநியோகம் வழங்குவது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள காணொலி மூலம் மண்டல தலைமை பொறியாளர்களை கேட்டு கொண்டார்.

பின்னர் மின்னகத்தை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

### பலத்த மழை: சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# மழைநீர் வெளியேற்றும் நடவடிக்கைகள்!

## கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மேற்கொண்டார்!

சென்னை, ஜூன் 20

தென்மேற்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கிண்டி கத்திபாரா மற்றும் ஜி.பி. சாலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மாநகராட்சி பணியாளர்களால் மழைநீர் வெளியேற்றும் பணிகள் மேற்கொள்ளப்படுவதை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நேற்று (19.06.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மழைநீர் தேங்காத வண்ணம் பணியாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தொடர் கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வெளியேற்றும் பணிகளை ரிப்பன் கட்டட அலுவலக தலைமையிடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, செய்தியாளர்கள் சந்திப்பில் சிவ்தாஸ் மீனா தெரிவித்ததாவது:

கடந்த 24 மணி நேரத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சராசரியாக 10.3 செ.மீ. மழை பெய்துள்ளது. சில இடங்களில் குறிப்பாக ஆலந்தூர், நுங்கம்பாக்கம், மீனம்பாக்கம் போன்ற இடங்களில் 14, 15 மற்றும் 16 செ.மீ. மழையும் பெய்துள்ளது. இருந்த போதிலும் பெரிய அளவிற்கு எந்த பிரச்சினையும் இல்லை. சில இடங்களில் நீர்த்தேக்கம் காணப்பட்டது. சுமார் 83 இடங்களில் மழைநீர்த்தேக்கம் உள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டு, அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மழை நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்பொழுது 25 இடங்களில் மோட்டார் பம்புகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மணி நேரத்தில் நீர்த்தேக்கம் சரிசெய்யப்படும்.

**நீரிறைக்கும் மோட்டார் பம்புகள்**

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேங்கும் மழை நீரை வெளியேற்றும் வகையில் 260 நீரிறைக்கும் மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 16 சுரங்கப் பாதைகள், நெடுஞ்சாலைத்துறையின் 6 சுரங்கப் பாதைகள் என மொத்தம் 22 சுரங்கப் பாதைகளில் கணேசபுரம் சுரங்கப்பாதை நீங்கலாக, 21 சுரங்கப் பாதைகள் மழைநீர்த்தேக்கம் இல்லாமல் போக்குவரத்திற்கு பயன்பாட்டில் உள்ளன. கணேசபுரம் சுரங்கப்பாதையில் புதிதாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடைமேம்பாலப் பணியின் காரணமாக மழைநீர் தேக்கம் காணப்படுகிறது. புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரயில்வே துறையினருடன் இணைந்து விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படும். தற்காலிகமாக, இங்கு தேங்கியுள்ள மழைநீரானது மோட்டார் பம்புகள் மூலம் வெளியேற்றப்பட்டு, ஒரு மணி நேரத்தில் போக்குவரத்திற்கு வழி வகை செய்யப்படும்.

மழையின் காரணமாக விழுந்த மரங்கள் மற்றும் மரக்கிளைகள் தொடர்பாக 48 புகார்கள் பெறப்பட்டு, அவற்றில் 40 புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது அயனாவரம் பகுதியில் மழைநீர்த் தேக்கம் உள்ளது. இந்தப் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, ஓரிரு நாட்களில் இந்தப் பணிகள் தொடங்கப்பட்டு, ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதங்களில் முடிவுறும்.

இந்த வருடம் ரூ.232 கோடி மதிப்பீட்டில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் மூன்று மாதங்களில் முடிவுறும்.

இந்த மழையின் காரணமாக மழைநீர் தேக்கம் காணப்படும் இடங்கள், தாழ்வான பகுதிகள் ஆகியவை இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ள கண்காணிப்பு அலுவலர்கள், வட்டார துணை ஆணையாளர்கள், மண்டல அலுவலர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, மழைநீர்த் தேக்கம் ஏற்படுவதற்கான வழிகள் மற்றும் காரணங்கள் ஆகியவற்றை கண்டறிந்து, வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக அவற்றை சரிசெய்ய தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடந்த 2 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக தற்பொழுது மழை நீர்த்தேக்கம் காணப்படவில்லை.

**ஒப்பந்தப் புள்ளிகள்**

வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக, மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பேருந்து மற்றும் உட்புறச் சாலைகளை அமைக்க சுமார் ரூ.500 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்ட இடங்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் பணிகள் முடிக்கப்பட்ட இடங்கள், சேதமடைந்த சாலைகள் ஆகியவற்றில் புதிதாக சாலைப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்பணிகள் அனைத்தும் மூன்று மாதங்களில் முடிக்கப்படும்.

மழைநீரை வெளியேற்றவும், விழுந்த மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்றவும் மாநகராட்சியின் சார்பில் 4000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுமக்களிடமிருந்து மழை தொடர்பான புகார்கள் மற்றும் தகவல்களை பெறும் வகையில் ரிப்பன் கட்டடம் மற்றும் மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் கட்டுப்பாட்டு அறை இயங்கி வருகிறது எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), விஷூ மஹாஜன், தலைமைப் பொறியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுவரும் அரசு பல் மருத்துவக்கல்லூரி கட்டுமானப் பணிகளை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேற்று (19.06.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் மற்றும் அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளனர்.